**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: 67

| | | | |
|---|---|---|---|
| Name: | அருணாச்சலம் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A8,11,12,15,17,19,23,24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 09.08.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்தில் வசித்துவருகிறேன். நான் தென்காசி

குற்றவியல் நீதிமன்ற நடுவர் மன்றத்தில் property clerk காக வேலைசெய்தபோது தென்காசி காவல்நிலைய குற்ற எண். 461/2007 U/s.147, 148, 341,307,302,109IPC வழக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து சொத்துக்களையும் விசாரணை அதிகாரி, அத்தாட்சி Form-95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதை நடுவர் அவர்கள் உத்தவுபடி பி.ஆர்.எண்.557, 646/2007-ன் படி நீதிமன்றக்காவலுக்கு எடுத்து பின்னர் விசாரணை அதியாரியின் வேண்டுகோளின் படி நீதிமன்றக்காவலுக்கு எடுத்த

சொத்துக்களை புலனாய்வு அதிகாரி வேண்டுகோளின் பேரில் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு பெற்று 11.10.2007 அன்று திருநெல்வேலி சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். இதுபற்றி விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சொத்துக்கள் பி.ஆர்.எண்.557/2007 சொத்துக்கள் 24.08.2007 அன்றும் பி.ஆர்.எண். 591/2007 சொத்துக்கள் 12.09.2007 அன்றும் பி.ஆர் 597/2007 சொத்துக்கள் 14.09.2007 தேதியன்றும் பி.ஆர் 646/2007 சொத்துக்கள் 10.10.2007 அன்றும் பி.ஆர் 3/2008 சொத்துக்கள் 02.01.2008 தேதியன்றும் பெறப்பட்டது. சம்பவம் நடந்த 10 தினங்கள் கழித்து முதல்பி.ஆர்எண் சொத்துக்களும் சுமார் 4 1/2 மாதங்கள் கழித்து பி.ஆர்.எண் 3/2008 சொத்துக்களும் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏன் காலதாமதமாக அனுப்பப்பட்டது என்பதற்கு புலனாய்வு அலுவலர் நீதிமன்றத்திற்கு விளக்கம் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை அந்த சொத்துக்கள் எங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த விபரமும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் இந்த வழக்கிற்கு ஏற்ப பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.